*16*

# மற்றவர்களுடன் இணக்கமாக இருத்தல்

## (மத்தேயு 7:3-12)

*"தீர்ப்பிடாதிருங்கள்" என்ற பாடத்தைக் கொண்டு நாம், (பிற கொள்கைகளுடன் கூட) மற்றவர்களுடன் இணக்கமாயிருப்பது எப்படி என்று போதிக்கும் ஒரு வசனப் பகுதியான மத்தேயு 7:1-12ன் படிப்பு ஒன்றைத் துவங்கினோம். உறவு முறைகளைப் பொறுத்த மட்டில் ஆறு ஆலோசனைகளை நமது வேதபாட வசனப்பகுதியில் இருந்து எடுக்கலாம் என்று நான் வாக்களித்திருந்தேன். அவற்றில் முதலாவது ஆலோசனை பின்வருமாறு இருந்தது: நாம் தீர்ப்பிடுபவர்களாக இருப்பதை நிறுத்த வேண்டும். அந்தக் கொள்கையின் தொடர்பாக இயேசு குறைந்த பட்சம் பின்வரும் ஐந்து நடைமுறைகள் பின்பற்றப் படுவதை ஊக்கம் இழக்கச் செய்தார் என்று நான் முன்மொழிந்தேன்:*

- *நமது பின்னணிகள், முன் தப்பெண்ணங்கள் மற்றும் முன்னுரிமைகள் ஆகியவை நமது தீர்ப்பின் மீது செயல்விளைவு ஏற்படுத்த அனுமதித்தல்.*
- *எல்லா உண்மைகளையுமோ அல்லது எல்லா சூழ்நிலைகளையுமோ அறிய முயற்சி செய்யாமல் அவசரமாகத் தீர்ப்பிடுதல்.*
- *இன்னொருவரின் நோக்கங்கள் குறித்துத் தீர்ப்பிடுதல்.*
- *மக்கள் செய்பவற்றின் மீது, மிகச்சிறந்த என்பதற்கு மாறாக மிக மோசமான சாத்தியக்கூறுள்ள கட்டுமானத்தை (விளக்கத்தை) வைத்தல்.*
- *நமது தீர்ப்புகளில் - இரக்கம் மற்றும் அன்பு ஆகியவற்றினால் நமது தீர்ப்பிடுதல்களை இதப்படுத்துவதற்குப் பதிலாக - கடுமையாக, கசப்பாக மற்றும் மாய்மாலாக இருத்தல்.*

*இவைகள் உலகளாவிய தவறுகளாக உள்ளன. நீங்கள் அனேகமாக, இவை ஒவ்வொன்றினாலும் குற்றப்பட்டுள்ள யாரையேனும் ஒருவரை சந்தித்திருப்பீர்கள், இல்லையா?*

*அந்தக் கேள்வியைக் கேட்ட நிலையில், நான் மன்னிப்புக் கோர அனுமதியுங்கள். அது ஒரு சூழ்ச்சியான கேள்வியாக உள்ளது. யாரேனும் ஒருவர் உங்கள் சிந்தைக்கு வந்தார்கள் என்றால், நீங்கள் அந்தத் தனிநபரைத் தீர்ப்பிட்டுள்ளீர்கள் என்று அர்த்தமாகிறது. குறைந்தபட்சமாக நான் அனேகமாக, மத்தேயு 7:1, 2ஐ நடைமுறைப்படுத்தியதால், வேறு யாரையாவது என்பதற்கு மாறாக உங்களைக் குற்றம் உள்ளவர்களாக இருப்பதற்கு வழிநடத்தியுள்ளேன் என்றாகிறது. மற்றவர்களுடன் இணக்கமாயிருத்தல் என்பதன் மீதான*

இரண்டாவது கொள்கையை அறிமுகப்படுத்துவதற்காக நான் இதை வேண்டுமென்றே செய்தேன்.

## தேவையான மாற்றங்களைச் செய்யுங்கள் (7:3-5)

நாம் மற்றவர்களுடன் இணக்கமாக இருக்க விரும்பினால், முதலில் நாம் நமது சொந்த வாழ்வில் தேவையான மாற்றங்கள் ஏற்படுத்துபவர்களாக இருத்தல் பற்றி நாம் அக்கறை கொண்டிருக்க வேண்டும். மாற்றத்திற்கான தேவை வருகிறபோது நாம் பொதுவாக, நம்மைக் கண்ணோக்குவதற்குப் பதிலாகப் பிறரைக் கண்ணோக்குவதையே விரும்பித் தேர்ந்து கொள்கிறோம். இதை இயேசு புரிந்து கொண்டிருந்தார். அவர் பின்வருமாறு கூறினார்:

> நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை[1] உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப்[2] பார்க்கிறதென்ன? இதோ, உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி: நான் உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்துப்போடட்டும் என்று நீ சொல் வதெப்படி? மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு: பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய். (வசனங்கள் 3-5).

இவ்வசனப் பகுதி, நகைச்சுவைத் தொடுகையொன்றைக் கொண்டுள்ளது. தனது கண்ணில் இருந்து ஒரு உத்திரம் நீட்டிக் கொண்டிருப்பதால், இன்னொருவனின் கண்ணில் இருக்கும் துரும்பைக் காணக்கூடியவனாக இருப்பதற்காகத் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளப் போராடும் ஒரு மனிதனை, கற்பனை செய்து பாருங்கள். (அந்த உத்திரமானது இங்கும் அங்குமாக ஊசலாடுவதையும் அருகில் இருப்பவர்கள் அது தங்கள் தலையில் மோதி விடாதபடிக்குத் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டி இருப்பதையும் உங்களால் சித்தரிக்க முடிகிறதா?) நாம் தீர்ப்பிடுகிறவர்களின் நிலையைக் காட்டிலும் மிக மோசமான நிலையில் நாம் இருக்கும்போது, [அவர்களை விசாரிக்கும்] நீதிபதிகளாக நாம் செயல்படுதல் என்பது கேலிக்கூத்தாக உள்ளது என்பதை நாம் அறிய வேண்டும் என்று இயேசு விரும்பினார்.[3]

வேதபாரகர் மற்றும் பரிசேயர் ஆகியோரின் மாய்மாலத் தன்மையைக் கிறிஸ்து தமது சிந்தையில் கொண்டிருந்து இருக்கலாம், ஆனால் இவ்வசனப் பகுதியின் சத்தியம் நம் எல்லாரையும் குற்றம் உணர்த்துகிறது. நமது சொந்தத் தவறுகளைக் காணாது விட்டு, மற்றவர்களின் தவறுகளைக் காணுதல் என்பது எவ்வளவு சுலபமாக உள்ளது! 2 சாமுவேல் புத்தகத்தில் தாவீது அரசரின் வரலாற்றைப் பற்றி நினைத்துப் பாருங்கள். அவர் பத்சேபாளுடன் விபசாரம் செய்து பின்பு பத்சேபாளின் கணவரைக் கொலை செய்வித்திருந்தார் (11:1-17). நாத்தான் தாவீதினிடம் சென்று, ஏழை மனிதனின் ஆட்டுக்குட்டியைக் கொன்ற பணக்கார மனிதனைப் பற்றிய கதை ஒன்றைக் கூறியபோது, அந்தக் குற்றம் செய்தவனை "தூக்கிலிட"[4] தாவீது விரும்பினார் (12:1-6). இருப்பினும் நாத்தான், "நீயே அந்த மனுஷன்!" என்று கூறியபோது (12:7அ), தூக்கில் தொங்குவதற்குப் பதிலாகத் தாவீது ஒரு ஜெபக் கூட்டத்திற்குத் தயாராக இருந்தார் (12:13; சங்கீதம் 51; 32). மற்றவர்களுடன் இணக்கமான இருத்தலைப் பொறுத்து, நாம் ஏற்படுத்த அவசியமான மாற்றங்கள் என்ன என்பதைக் காண்பதற்கு முதலில் நம்மையே

நாம் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும் என்று இயேசு விரும்புகிறார்.

மத்தேயு 7:3ம் வசனம், கிறிஸ்துவினால் கண்டனம் பண்ணப்பட்ட இன்னொரு விஷயத்தையும் தீர்ப்பிடுதலின் பட்டியலில் கூட்ட முடிகிறது. "பார்க்கிறது" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*blepo*, என்ற) கிரேக்க வார்த்தையானது, "காணுதல்" என்பதற்கான வழக்கமான வார்த்தையைக் காட்டிலும் அதிக விரிவான அர்த்தத்தைக் கொண்டதாகவும் "அதிக விருப்பநோக்குள்ள, உண்மையான புரிந்து கொள்ளுதலை" விவரிப்பதாகவும் உள்ளது.[5] இது, கூர்ந்தாய்வுசெய்ய, நெருக்கமாகப் பரிசீலனை செய்ய என்று அர்த்தப்படுகிறது. துரும்பு என்பது காண்பதற்கு எளிதானதல்ல. யாரேனும் ஒருவர் உங்களிடத்தில், "என் கண்ணில் ஒரு துரும்பு உள்ளது" என்று கூறும்போது, வெளிச்சம் மிகச்சரியாக இல்லாத நிலையில் மற்றும் நீங்கள் அவருக்கு மிகவும் நெருங்கி இராத வரையில் அனேகமாக அதை உங்களால் காண இயலாது. ஆகவே நாம், இந்த மிகத்தொலைவான மேலாதிக்கம் கொண்ட பண்பை, மோசமான தீர்ப்பிடும் வழக்கத்தின் பட்டியலில் சேர்த்துக் கொள்ள முடிகிறது: *மக்களிடம் உள்ள மிகச்சிறந்தவற்றைப் பார்ப்பதற்குப் பதிலாக, அவர்களிடம் உள்ள மிகமோசமானவற்றைப் பார்த்தல், விமர்சிக்க ஏதேனும் தவறைக் கண்டறியும் முயற்சியில் ஒவ்வொரு வார்த்தை மற்றும் செயலையும் கடினமுயற்சியுடன் கூர்ந்தாய்வு செய்தல்.* அதுவே வேதபாரகரும் இயேசுவை நடத்திய விதமாக இருந்தது.

"துரும்பு" மற்றும் "உத்திரம்" என்பவை ஒரே பகுதிப்பொருள்களைக் கொண்டுள்ளதால் அவற்றை உருவமாக இயேசு பேசினார் என்று பல விளக்கவுரையாளர்களும் சில மொழிபெயர்ப்பாளர்களும் நம்புகின்றனர். ஒன்று மிகவும் சிறிதாகவும் இன்னொன்று மிகவும் பெரிதாகவும் இருந்தது, ஆனால் இவ்விரண்டுமே மரத்தினால் ஆனவையாக இருந்தன. NIV மொழிபெயர்ப்பில் "speck of sawdust" மற்றும் "plank" என்றுள்ளது.

துரும்பும் உத்திரமும் ஒரே வகையான பொருளினால் ஆனவை என்ற சாத்தியக்கூறானது, ஆர்வமிக்க சில சிந்தனைகளைத் தூண்டுகிறது. நமது சொந்த வாழ்வில் நாம் கொண்டுள்ள தவறுகளை மற்றவர்களில் காணும்போது நாம் அடிக்கடி, மிகவும் உணர்ச்சிப் பூர்வமானவர்களாகி விடுதல் என்பது மனித இயல்பின் உண்மையாக உள்ளது. இதை மனோதத்துவ அறிஞர்கள், "அகவெளிப்பாடு" என்று அழைக்கின்றனர்: நமது சொந்த வாழ்வில் நாம் காண்பவற்றைப் பிறரின் வாழ்வில் [இருப்பது கண்டு] வெளிப்படுத்துதல் - மற்ற ஒவ்வொருவரும் நம்மைப்போன்றே உள்ளனர், நம்மைப் போன்றே மற்றவர்களும் சிந்திக்கின்றனர் மற்றும் உணருகின்றனர் என்று நாம் யூகித்துக் கொள்கிறோம்.நமது சொந்தப் பாவங்களைப் போன்றவற்றை மற்றவர்களும் செய்வதாகக் காணும்போது, நமது பாவங்கள் மற்றவர்கள் செய்த பாவங்களைப் போன்று அவ்வளவு மோசமானவையாகக் காணப்படுவதில்லை. பெட்ரான்டு ரஸ்ஸல் என்பவர் எழுதிய, நன்கு அறியப்பட்ட "emotive conjugations" என்ற புத்தகம், நாம் சூழ்நிலைகளை அனுமானிக்கும் வழியை விவரிக்கிறது: "நான் உறுதியானவனாக இருக்கிறேன், நீ பிடிவாதமானவனாக இருக்கிறாய், அவன் பன்றித் தலையனாக இருக்கிறான். நான் மறுபடியும் ஆழ்ந்து சிந்தித்திருக்கிறேன்; நீ உன் மனதை மாற்றிக்கொண்டு இருக்கிறாய்; அவன் தன் வார்த்தையில் இருந்து தவறியிருக்கிறான்."[6] இதற்கான வேதாகம உதாரணம் ஒன்றிற்கு, யூதா மற்றும் அவரது மருமகளான தாமார் ஆகியோரின் வரலாற்றை வாசியுங்கள்

(ஆதியாகமம் 38). தாமார் "வேசித்தனம்பண்ணினாள்" மற்றும் அவள் "கர்ப்பவதியுமானாள்" என்று கூறப்பட்டபோது, அவளைக் கொல்ல அவர் தயாரானார் (வசனம் 24); ஆனால் யூதாவே அந்தக் குழந்தைக்கு தகப்பன் என்று தாமார் நிரூபித்தபோது (வசனம் 25), மரண தண்டனை விதிக்க வேண்டும் என்ற கருத்து விரைவிலேயே கைவிடப்பட்டது (காண்க வசனம் 26).

மரத்தினால் செய்யப்பட்ட இரு பொருட்களைக் கொண்டு இயேசு வேண்டுமென்றே தமது கருத்தை விளக்கப்படுத்தினார் என்றால், நாம் உத்திரம் அளவான பாவம் கொண்ட ஒரு மனிதர், அதே பாவத்தின் துரும்பு அளவையே கொண்ட இன்னொருவர் மீது மேலாதிக்கம் செய்யும், பகுத்தறிவுக்கு ஒவ்வாத சூழ்நிலையைக் கொண்டிருக்கிறோம் என்றாகிறது. இவ்வகையான சீர்பொருத்தமற்ற தன்மை பற்றிப் பவுல், ரோமர் 2:1-3ல் பின்வருமாறு எழுதினார்:

> ஆகையால், மற்றவர்களைக் குற்றவாளியாகத் தீர்க்கிறவனே, நீ யாரானாலும் சரி. போக்குச்சொல்ல உனக்கு இடமில்லை; நீ குற்றமாகத் தீர்க்கிறவைகள் எவைகளோ, அவைகளை நீயே செய்கிறபடியால், நீ மற்றவர்களைக் குறித்துச் சொல்லுகிற தீர்ப்பினாலே உன்னைத்தானே குற்றவாளியாகத் தீர்க்கிறாய். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்களுக்குத் தேவனுடைய நியாயத்தீர்ப்பு சத்தியத்தின்படியே இருக்கிறதென்று அறிந்திருக்கிறோம். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்களைக் குற்றவாளிகளென்று தீர்த்தும், அவைகளையே செய்கிறவனே, நீ தேவனுடைய நியாயத்தீர்ப்புக்குத் தப்பிக்கொள்ளலாமென்று நினைக்கிறாயோ?

இப்படிப்பட்ட வழிமுறையில் செயல்பட்டவர்களை இயேசு எவ்வாறு பண்புப்படுத்தினார்? இயேசு வார்த்தைகளினால் ருசியூட்டவில்லை; 5ம் வசனத்தின் முதற்பகுதியில் அவர், *"மாயக்காரனே!"* என்று கூறினார். *மாயத்தன்மையுடன் இருத்தல்* நம்மை *மாயக்காரர்கள்* ஆக்குகிறது. நாம் தொடர்ந்து மற்றவர்களை விமர்சித்துக் கொண்டிருந்தால், நமது பதிவேடு தெளிவாக உள்ளது, நமது வாழ்வு சரியாக உள்ளது என்று மறைமுகமாக உணர்த்துகிறோம். இல்லையென்றால் நாம் தீர்ப்பிடத் தகுதியற்றவர்களாக இருப்போம். அதே வேளையில் நாம் இந்தப் பெரிய தொலைபேசிக் கம்பங்கள்[7] நமது கண்குழியில் இருந்து நீட்டிக் கொண்டிருக்க விட்டிருக்கிறோம்.

நியாயத்தீர்ப்பை நாம் சுயத்தைக் கொண்டு தொடங்க வேண்டும் என்று நான் மீண்டும் கூறுகிறேன். இயேசு, "*முன்பு* உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு" என்று கூறினார். மற்றவர்களின் பாவங்களை அறிக்கையிடுதல் சுலபமாக உள்ளது; நமது சொந்தப் பாவங்களை அறிக்கையிடுதல் கடினமாக உள்ளது. சுயபரிசோதனையைப் பல சந்தர்ப்பப் பொருள்களில் பவுல் பரிந்துரைத்தார்: "உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்; உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள்" (2 கொரிந்தியர் 13:5); "எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, ..."; "நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்" (1 கொரிந்தியர் 11:28, 31). ரோமர் 14:13 விசேஷமாக நடைமுறைப்படுவதாக உள்ளது. இவ்வசனத்தை பிலிப்ஸ்ஸின் மொழிபெயர்ப்பு, "ஆகவே நாம் ஒருவர் மற்றவரை விமர்சிக்கக் கண்களைத் திருப்புவதை நிறுத்துவோமாக. நாம் விமர்சிப்பவர்களாக இருக்க வேண்டும் என்றால், *நமது*

*சொந்த நடத்தையைக் குறித்து விமர்சிப்பவர்களாக இருப்போமாக மற்றும் ஒரு சகோதரர் இடறும்படியாகவோ அல்லது விழுந்து போகும்படியாகவோ எதையும் செய்யாதிருக்கும்படி கவனிப்போமாக'' என்று தரவழைக்கிறது (வலியுறுத்தம் கூட்டப்பட்டது).*

*சுய பரிசோதனையில் கூட பொது அறிவு தேவையானதாக உள்ளது. நாம், தனிப்பட்ட தோல்விகள் மற்றும் குறைவுகள் கொண்ட சாவுக்கேதுவான அலைக்கழிப்பைப் பற்றி - இதை வார்ரென் வயர்ஸ்ப் அவர்கள் "முழுநிறைவான சவ ஆய்வு'' என்று அழைத்தார்[8] - பேசவில்லை. இருந்தபோதிலும் மற்றவர்களுடன் நாம் இணக்கமாக இருக்க விரும்பினால், நமது சொந்த வாழ்வில் அவசியமான மாற்றங்களை ஏற்படுத்துதல் என்பதே நமது முதல் அக்கறையாக இருக்க வேண்டும். நாம் நம்மைக் கொண்டு இதைத் தொடங்கினால், நாம் தீர்ப்பிடுபவர்களாக இருப்பதற்கு நம்மைக் குறைவாக ஒப்புக் கொடுத்தவர்களாக இருப்போம். நாம் நமது வாழ்வில் உள்ள உத்திரம் போன்ற பாவங்கள் எல்லாவற்றையும் நீக்கிப்போடப் பிரயாசப்பட வேண்டும், ஆனால் சந்தர்ப்பப்பொருளில், தீர்ப்பிடுபவர்களாக இருத்தல் என்பதே நீக்கிப்போட வேண்டிய உத்திரம் போன்ற பாவமாக உள்ளது.*

*இப்போது நாம் 3முதல் 5வரையிலான வசனங்களை விட்டுச் செல்ல முடியும், ஏனெனில் நாம் இவ்வசனங்களின் முதன்மை வலியுறுத்தத்தை எடுத்துரைத்து முடித்துள்ளோம். இருப்பினும் இந்தப் பகுதியின் முடிவில், நான் காணாது விட விரும்பாத ஒரு சத்தியம் உள்ளது.*

## தாழ்மையுடனும் உணர்வுடனும் மற்றவர்களுக்கு உதவுங்கள் (7:5ஆ)

*யாரேனும் ஒருவரை நாம் உண்மையாகவே அன்புகூர்ந்தால் மற்றும் அவரது வாழ்வில் பாவத்தை நாம் கண்டால், அந்தப் பாவத்தை அவர் நீக்கிப்போடுவதில் அவருக்கு உதவ நாம் முயற்சி செய்வோம்.[9] இதுவே 5ம் வனத்தின் பிற்பகுதியில் மறைமுகமாக உணர்த்தப்படுகிறது: ஒவ்வொருவரும் தமது சொந்தக் கண்ணில் இருந்து உத்திரத்தை எடுக்க வேண்டும் என்று இயேசு கட்டளையிட்டபின்பு, அவர் "பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய்'' என்று கூறினார் (வலியுறுத்தம் கூட்டப்படுகிறது). நமது சொந்த பாவங்களை நீக்கச் செயல்படுதல் என்பது நமது முதல் முன்னுரிமையாக உள்ளது என்று இயேசு கூறினார், ஆனால் அவர், நமது வாழ்வை முறைப்படுத்திய பின்னர், ஒரு சகோதரனுக்கு அவரது பாவங்களை நீக்க உதவுதலை ஊக்கம் குலையச் செய்ய வில்லை.[10] நமது இருதயங்கள் மற்றும் வாழ்வு ஆகியவற்றில் இருந்து பாவத்தை நீக்கிப் போடுவதற்கு ஒருவர் மற்றவருக்கு உதவ வேண்டியதன் அவசியம் பற்றிப் பல வசனப் பகுதிகள் போதிக்கின்றன:*

> சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப்பண்ணுங்கள்; நீயும் சோதிக்கப் படாதபடிக்கு உன்னைக்குறித்து எச்சரிக்கையாயிரு. ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள் (கலாத்தியர் 6:1, 2).

சகோதரரே, உங்களில் ஒருவன் சத்தியத்தைவிட்டு விலகி மோசம் போகும்போது, மற்றொருவன் அவனைத் திருப்பினால், தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன் (யாக்கோபு 5:19, 20).

மத்தேயு 7:3-5ல், கண்ணிலுள்ள துரும்பைப் பற்றிய இயேசுவின் விவரிப்பு, *உதவுவதன் அவசியத்தை* அடிக்கோடிடுகிறது. விழிக்கோளங்கள் அல்லது கண்ணிமைகள் என்பவை மிகவும் கூருணர்வு கொண்டவையாக உள்ளன. கண்ணில் ஒரு சிறு துரும்பு இருத்தல் என்பதுகூட சிரிப்பிற்குரிய விஷயமாக இருப்பதில்லை. உங்களுக்குக் குழந்தைகள் இருந்தால், அவர்களில் ஒருவனிடத்தில் இருந்து நீங்கள் அனேகமாக "என் கண்ணில் ஏதோ விழுந்துவிட்டது!" என்ற பெருந்துன்பக் குரலைக் கேட்டு இருக்கலாம்.

இந்த விவரிப்பு, உதவி செய்பவராலேயே மேற்கொள்ளப்பட வேண்டிய *அணுகுமுறையையும்* சுட்டிக்காண்பிக்கிறது. எனது கண்ணில் ஏதேனும் துரும்பு உள்ளது என்றால் அதை நீக்கிப்போட நீங்கள் மனமுவந்து முன்வருகிறீர்கள், நீங்கள் மிகவும் கவனம் நிறைந்தவராகவும் பரிவிரக்கம் உள்ளவராகவும் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அவ்வாறே நாம், பிறரைக் கையாளுவதிலும் கூருணர்வுடன் இருப்பது அவசியமாகும். பவுல், "... *சாந்தமுள்ள ஆவியோடே* அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப்பண்ணுங்கள்" என்று கூறினார் (கலாத்தியர் 6:1; வலியுறுத்தம் கூட்டப்பட்டுள்ளது).

பரிசுத்தமான தேவன் முன்பாக, நியாயத்தீர்ப்பில் ஒரு நாளிலே நாம் யாவரும் யாருக்குமுன்பாக நின்றாக வேண்டுமோ அந்தத் தேவனுக்கு முன்பாக, நாம் யாவருமே பாவிகளாக இருக்கிறோம். நம் யாவருக்கும் ஆவிக்குரிய வகையில் உதவி தேவைப்படுகிறது, எனவே நாம் மற்றவர்களுக்கு உதவி செய்ய மனவிருப்பமாக இருப்போமாக; ஆனால் நாம் அவ்வாறு செய்கையில், அந்த உதவியை நாம் கவனத்துடனும் பரிவிரக்கத்துடனும் அளிப்போமாக.

## ஒவ்வொருவரும் வித்தியாசமானவர்கள் என்பதை உணர்ந்தறிதல் மற்றும் கடினமான சூழ்நிலையைக் கையாளக் கற்றுக்கொள்ளுதல் (7:6)

அடுத்ததாக நாம், "நாய்கள்" மற்றும் "பன்றிகள்" மீதான வசனத்திற்கு வருகிறோம் (வசனம் 6). இங்கு ஒரு புதிர் உள்ளது; இவ்வசனம் இயேசு கூறிய ஆவிக்கு எதிராகச் செல்வதாகக் காணப்படுகிறது. நாம் மற்றவர்களை "நாய்கள்" மற்றும் "பன்றிகள்" என்று கூறிக்கொண்டு திரியவேண்டுமா? இந்த வாக்கியத்தைக் கிறிஸ்து சமானநிலைக்காக இட்டார் என்று நான் நினைக்கிறேன். நாம் மாயக்காரர்களாக, தவறு கண்டுபிடிக்கிறவர்களாக, நம்மைநாமே "கட்டிகளை (தவறுகளை) ஆய்வுசெய்பவர்கள்" என்று நியமித்துக் கொண்டவர்களாக இருக்கக் கூடாது; ஆனால் நாம் வஞ்சிக்கப்படுகிறவர்களாகவும் இருக்கக் கூடாது. தேவன் நமக்குப் பகுத்தறிவைக் கொடுத்தார், மற்றும் இதை நாம் மக்களைக் கையாள்வதில் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் எதிர்பார்க்கிறார். நாம் உணர்வற்றவர்களாகவும் தணிக்கை செய்பவர்களாகவும் இருக்கக் கூடாது,

*ஆனால் நாம் கவனம் இல்லாதவர்களாகவும் எளிதில் ஏமாறுபவர்களாகவும் கூட இருக்கக் கூடாது.*

*1முதல் 5வரையுள்ள வசனங்களை மாத்திரம் இயேசு கொடுத்திருந்தார் என்றால், அவர் நம்மைத் தாக்குதலுக்கு ஆட்படுபவர்களாக, ஒருவரைத் தீர்ப்பிடுதல் குறித்து நாம் ஏதேனும் தவறு செய்துவிடுவோமோ என்ற பயத்தினால் எந்தத் தீர்ப்பையும் வெளியிடப் பயந்தவர்களாக விட்டிருப்பார். இருப்பினும் 6ம் வசனத்தில் அவர், மற்றவர்களைக் குறித்து நாம்* சில *தீர்ப்புகளை ஏற்படுத்த* வேண்டும் *என்று மறைமுகமாக உணர்த்தினார் - மற்றும் அவர் இந்த உண்மையை, நாய்கள் மற்றும் பன்றிகள் என்பவற்றைக் கொண்ட குறிப்புடன் விவரித்தார்: "பரிசுத்தமானதை[11] நாய்களுக்குக் கொடாதேயுங்கள்; உங்கள் முத்துகளைப் பன்றிகள்முன் போடாதேயுங்கள்; போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து, திரும்பிக் கொண்டு உங்களைப் பீறிப்போடும்."*

*கிறிஸ்துவின் வார்த்தைகளினுடைய அர்த்தத்தை நாம் ஆழ்ந்து சிந்திப்பதற்கு முன்னர், நாய்கள் மற்றும் பன்றிகள் ஆகியவற்றின் இயல்பை, குறிப்பாக அவரது நாட்களில் அவற்றின் இயல்பை, நாம் புரிந்து கொள்வது அவசியமாகிறது. இவையிரண்டுமே மோசேயின் நியாயப்பிரமாணத்தின்கீழ் அசுத்தமான மிருகங்களாக இருந்தன.[12] நீங்கள் நாய்களைப் பற்றி நினைக்கும்போது, சிலரால் சொந்தமாக வளர்க்கப்படுகிற ஆடம்பரமான நாய்களைப் பற்றி நினைக்க வேண்டாம், ஆனால் அதற்கு மாறாக, கூட்டமாக ஓடுகிற, வெறிகொண்ட, காட்டுத்தனமான, அரைப்பட்டினியாக உள்ள, அசுத்தமான தோட்டிகளான நாய்களைப் பற்றி நினைத்துப் பாருங்கள். "நாய்" என்ற வார்த்தை வேதாகமத்தில் சில வேளைகளில், பாவி ஒருவருக்கு ஒப்புவமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது (மத்தேயு 15:26; பிலிப்பியர் 3:2; வெளிப்படுத்தின விசேஷம் 22:15). பன்றி என்பது யூதரின் மனதில் அசுத்தத்தின் நினைவுச் சின்னமாக இருந்தது. விஷயம் இவ்வாறு இருக்குமென்றால், பலஸ்தீனத்தில் இருந்த (எல்லாமும் இல்லை என்றாலும்) பெரும்பான்மையான பன்றிகள் காட்டுத்தனமாக ஓடின எனலாம்.*

*பிந்திய உண்மையானது பல விளக்கவுரையாளர்களால் தவறவிடப்பட்டுள்ளது. அவர்கள் 6ம் வசனத்துடன் போராடுகையில், "திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும்" என்பது பன்றிகளுக்குப் பதிலாக நாய்களையே குறிப்பதாக இருக்க வேண்டும் என்று கூறுகின்றனர். இது உண்மையாக இருக்கலாம்,[13] ஆனால் பன்றிகள் "திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடுதலை" செய்ய இயலாது என்று வலியுறுத்துதல், பன்றிகளைப் பற்றிய அவர்களின் அறியாமையை வெளிப்படுத்துகிறது. ஒரு புதிதாய்ப் பிறந்த தனது குட்டிகளை நீங்கள் நெருங்கிச் செல்வதாக ஒரு தாய்ப்பன்றி நினைத்தால் அது உங்கள் காலை பிய்த்துப் போடும் நிலையில் இருக்கும்போது அவர்கள் ஒருக்காலும் அதன் அருகில் இருந்திருக்க மாட்டார்கள். மேலும் அவர்கள், எல்லா உயிரினங்களிலும் மிகவும் அபாயகரமான, மிதிப்புக்கு மிதிப்பைத் திரும்பத் தருகிற காட்டுப்பன்றியின் கொடூரத் தன்மை பற்றியும் அறியாதிருக்கின்றனர்.[14]*

*நாய்கள் மற்றும் பன்றிகளின் நிலைப்பாட்டைச் சிந்தையில் கொண்டு, 6ம் வசனத்தைத் திரும்பவும் கண்ணோக்குங்கள். இயேசு மீண்டும் ஒருமுறை, மதியீனத்தைச் சித்தரிக்கும் காட்சிகளை முன் வைக்கிறார். முதலில் அவர் "பரிசுத்தமானதை நாய்களுக்கு" கொடுத்தல் பற்றிப் பேசினார். கலப்பினமான தெரு நாய் ஒன்று ஒருவர் பரிசுத்தமானதை அல்லது தூயதானதை*

மதிக்க வழியெதுவும் இருப்பதில்லை. சிலர், இவ்வசனப் பகுதி, பலிபீடத்தில் இருந்து ஒரு இறைச்சித் துண்டை ஆசாரியர் எடுத்து அதைக் காட்டு நாய்களின் கூட்டம் ஒன்றிற்கு வீசி எறிதல் என்ற நினைத்துப் பார்க்க இயலாத சூழ்நிலையைக் குறிப்பிடுவதாக நினைக்கின்றனர். இது ஒருக்காலும் செய்யப்பட்டிராது.

பின்பு இயேசு, "பன்றிகளுக்கு முன் முத்தை" போடுதல் பற்றிய குறிப்பை உரைத்தார். நாய்கள் பரிசுத்தமானதை மதிக்க இயலாதிருப்பதைப் போன்றே, பன்றிகளும் முத்துக்களை ஒருக்காலும் மதிப்பது இல்லை. முத்துக்கள் உணவு அல்ல என்பதை அவைகள் கண்டறிந்த உடனே (மற்றும் ஒருவேளை விலையுயர்ந்த அக்கற்களை உண்ண முயற்சி செய்கையில் ஒரு பல் உடைந்த நிலையில்), அவைகள் "திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போட" சாயக்கூடும். எனது மனமானது, சூரியன் உதயம் ஆவதற்கு முன்னர் பன்றிகளுக்கு உணவு தருவதற்காக நான் விழித்து எழுந்த தொலைதூரக் கடந்த காலத்தை நோக்கிப் பின்செல்கிறது. பன்றிகளுக்கான உணவை நான் ஒரு பழைய உலோக வாளியில் கலக்கும் சத்தம் கேட்ட உடனே பன்றிகள் வெறிபிடித்தவை போன்று ஆகிவிடும். அவற்றை அடைத்து வைத்திருக்கும் இடத்தை நான் அணுகும்போது, அவைகள் கூச்சல் இட்டுக் கொண்டு, ஒன்றின் மீது ஒன்று ஏறித் தாவிக்கொண்டிருக்கும். பசியுடன் இருந்த குறைந்த பட்சம் மூன்று அல்லது நான்கு பன்றிகள் தீவனத் தொட்டியை நெருங்கிக் கவிந்திருக்கையில், உணவை அந்தத் தொட்டிக்குள் ஊற்றுவது எனக்குக் கடினமாக இருக்கும். நான் அந்தத் தொட்டிக்குள், அரைக்கப்பட்ட தானியம் மற்றும் பால் ஆகியவற்றின் கலவைக்குப் பதிலாக முத்துக்களை ஊற்றியிருந்தால், பன்றிகள் அந்த விஷயத்தைக் கண்டறிந்த உடனே, நான் ஒரு பலமான வேலி அவைகளைச் சுற்றி இருக்க வேண்டும் என்று ஜெபிக்க வேண்டி இருந்திருக்கும்!

அடுத்ததாக நாம், "இயேசு குறிப்பிட்ட 'நாய்கள்' மற்றும் 'பன்றிகள்' யார்?" என்று கேட்டாக வேண்டும். இந்தக் கேள்வியானது, " 'பரிசுத்தமானது' என்ற மற்றும் 'முத்துக்கள்' என்பவை யாவை?" என்று முதலில் கேட்பதன் மூலம் மிகச்சிறந்த வகையில் பதில் அளிக்கப்படுகிறது. இயேசு, இராஜ்யத்தை (சபையை) "விலையுயர்ந்த *முத்து*" என்ற வகையில் குறிப்பிட்டார் (மத்தேயு 13:45, 46; வலியுறுத்தம் கூட்டப்படுகிறது). இராஜ்யத்தை (சபையை) பற்றிய செய்தியானது நற்செய்தி (சுவிசேஷம்) என்று அழைக்கப்படுகிறது (காண்க மத்யே 4:23; 9:35; 24:14). தேவனுடைய வார்த்தை *பரிசுத்தமானதாக* உள்ளது (ரோமர் 1:2; 2 பேதுரு 2:21), மற்றும் பரிசுத்தமான செய்தி "பொக்கிஷம்" என்ற வகையில் பேசப்பட்டுள்ளது (2 கொரிந்தியர் 4:7).

இவை யாவும் உண்மையாக இருப்பதால், பெரும்பான்மையான விளக்கவுரையாளர்கள், பின்வரும் தன்மைகளினால் ஆவிக்குரிய மதிப்பீட்டில் குறைவுபடுகிற தனிநபர்களுக்குத் தேவனுடைய வசனத்தைக் கொடுத்தலுக்கு எதிராகக் கிறிஸ்து எச்சரித்தார் என்று நம்புகின்றனர்:

- சத்தியத்தை தொடர்ந்து புறக்கணிப்பவர்கள்?
- சுவிசேஷத்தை "பைத்தியக்காரத்தனம்" என்று எண்ணுகிறவர்கள் (1 கொரிந்தியர் 1:18, 23; 2:14),
- தீத்து 1:15ல் பேசப்படுகிற, "அசுத்தமுள்ளவர்களுக்கும் அவிசுவாசமுள்ளவர்களுக்கும்" என்ற வகையிலான "புத்தியும்

மனச்சாட்சியும் அசுத்தமாயிருக்கும்" நிலையைக் கொண்டுள்ள மக்கள்.

மீண்டுமாக இயேசு, தமது வார்த்தைகளை ஏற்றுக்கொள்ள மறுத்த வேதபாரகர்களையும் பரிசேயர்களையும் தமது சிந்தையில் கொண்டிருக்கலாம்.

6ம் வசனத்திற்கான இந்த விளக்கத்தைச் சில விளக்கவுரையாளர்கள் மறுக்கின்றனர்,[15] ஆனால் இது, இவ்வசனத்தின் மிக எளிய விளக்கம் என்றும் அது வேதாகமத்தின் மற்ற வசனப்பகுதிகளுடன் இசைந்துள்ளது என்றும் நம்புகிறேன். இயேசு, "வரையறைக்குட்பட்ட கட்டளையைக்" கொடுத்தபோது, அவர் தமது சீஷர்களிடத்தில், அவர்கள் புறக்கணிக்கப்படும்போது, தங்கள் மிதியடிகளின் கீழ் உள்ள தூசியை உதறிவிட்டு[16] கடந்து செல்லும்படி கூறினார் (மத்தேயு 10:13, 14).[17] பவுலின் செய்தி யூதர்களால் புறக்கணிக்கப்பட்ட ஒவ்வொரு வேளையிலும், அவர் புறஜாதிகளிடமாகத் திரும்பினார் (நடபடிகள் 13:44-51; 18:5, 6; 19:9; 28:17-28).

இது கடினமான தீர்ப்பிடுதலாக உள்ளது. யாரேனும் ஒருவர் "நாயாக" அல்லது "பன்றியாக" இருக்கிறார் என்பதை முன்னதாகவே முடிவு செய்யும் உரிமையை நாம் கொண்டிருப்பதில்லை. அன்பு எப்போதுமே மிகச்சிறந்தவற்றை நம்புகிறது மற்றும் நாம் ஒவ்வொருவருக்கும் சுவிசேஷத்தைக் கேள்விப்படும் வாய்ப்பைக் கொடுக்க வேண்டும் (மத்தேயு 28:18-20; மாற்கு 16:15, 16). இதற்கு மறுபுறத்தில், யாருக்கேனும் நாம் தொடர்ந்து போதிக்க முயற்சி செய்து, அவர் தொடர்ந்து அதைப் புறக்கணித்து இருந்தால், ஒரு வேளையில், பொது அறிவும் நமது காலம் குறித்து நாம் நல்ல உக்கிராணக்காரர்களாக இருக்க வேண்டும் என்ற கொள்கையும் (எபேசியர் 5:16), "உங்கள் முத்துக்களைப் பன்றிகளுக்கு முன்னால் போடுவதை நிறுத்தி வேறு யாருக்கேனும் போதிக்கப் பாருங்கள்" என்று கூறும்.

இருப்பினும் 7:1-12ல், இயேசுவின் விவரிப்புகளில் அவர், நாம் மாறுபட்ட பல வகையான மக்களுடன் தொடர்பு கொள்ள வேண்டியுள்ளது மற்றும் ஒவ்வொரு வகையினரையும் எவ்வாறு நடத்துவது என்று நாம் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதைத் தெளிவாக்கினார் என்பதே இவ்வேளையில் நான் ஏற்படுத்த விரும்பும் கருத்தாக உள்ளது. தங்கள் கண்களில் துரும்புகளைக் கொண்டவர்களாகப் புண்படுத்தும் மக்களை, நமது அன்பும் கவனிப்பும் தேவைப்படும் தனிநபர்களை நாம் எதிர்கொள்வோம். நாம் ஒருக்காலும் உதவ இயலாத பன்றிகள் மற்றும் நாய்கள் போன்ற மக்களையும் நாம் சந்திப்போம். அவர்கள் தங்களை நெருங்க நமது பகுதியில் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு முயற்சியையும் எதிர்த்து நிற்பார்கள். நம்மை எவ்வாறு பீறிப்போடுவது என்பதைத் தீர்மானம் செய்வது என்பதே அவர்கள் நம்மிடம் கொண்டுள்ள ஒரே ஆர்வமாக இருக்கும். இப்படிப் பட்டவர்களை விட்டுவிடுதல் என்பதே நாம் செய்யக்கூடிய மிகச்சிறந்த விஷயமாக இருக்கும்.

இயேசுவின் பாதங்களைக் கண்ணீரால் கழுவிய பெண்ணிடமும் (லுக்கா 7:36-50) விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணிடமும் (யோவான் 8:2-11) இயேசு காண்பித்த மென்மைத் தன்மையைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். இதை, மத்தேயு 23ல் கடின இருதயம் கொண்ட வேதபாரகர் மற்றும் பரிசேயர்களிடத்தில் அவர் சொன்ன புண்படுத்தும் பழிப்புரையுடன் நேரெதிராக ஒப்பிட்டுப் பாருங்கள். அவர் திரும்பத் திரும்ப, "மாயக்காரராகிய

தேவபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ" என்று கூறினார் (வசனங்கள் 13, 14, 15, 23, 25, 27, 29; வலியுறுத்தம் கூட்டப்படுகிறது).

நாய்களையும் பன்றிகளையும் சுட்டுக்கொல்லுமாறு இயேசு கூறவில்லை. அப்படிப்பட்டவர்களைத் தனியே விட்டுவிடும்படி மட்டுமே அவர் கூறினார். பவுலின் புத்திமதி இவ்விடத்தில் ஏற்புடையதாக உள்ளது: "கூடுமானால் *உங்களாலானமட்டும்* எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்" (ரோமர் 12:18; வலியுறுத்தம் கூட்டப்படுகிறது).

## தேவனைச் சார்ந்திருக்கத் தீர்மானம் செய்யுங்கள் (7:7-11)

இது நம்மை, ஜெபத்தின் வல்லமை மீதான மாபெரும் வசனப் பகுதிக்குக் கொண்டுவருகிறது: 7முதல் 11 வரையிலான வசனங்கள். இவ்வசனங்களை முதலாவதாக நாம் வாசிக்கும்போது, உறவுகள் பற்றிய பாடக்கருத்தை இயேசு முடித்திருந்தார் என்று நினைக்கலாம். இருப்பினும் இவ்வசனப் பகுதிக்குப் பின்னால் உள்ள வசனம் (வசனம் 12) "ஆதலால்" என்ற வார்த்தையைக் கொண்டு கருத்து மாறுதலை ஏற்படுத்தி பின்பு மற்றவர்களுடன் இணக்கமாயிருப்பது எவ்வாறு என்பதற்கு நிறைவான அறிவுறுத்துதலைக் கொடுக்கிறது: இது பொன்விதி என்று அழைக்கப்படுகிறது. "ஆதலால்" என்ற வார்த்தை, இயேசு தமது பாடக்கருத்தை முடித்தார் - அதைத் தொகுத்துரைத்து, ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தார் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. 7முதல் 11வரையிலான வசனப் பகுதியானது மற்றவர்களுடன் இணக்கமாயிருத்தல் என்ற முற்றான ஆய்வுக்கருத்துடன் ஏதோ ஒருவகையில் தொடர்புடையதாக உள்ளது. நான் இவ்வசனங்களை "நீங்கள் தேவன் மீது நம்பிக்கை வைக்க முடியும்" என்ற அடுத்த பாடத்தில் விரிவாகக் கையாள்வேன். இப்போது நாம் கலந்துரையாடிக் கொண்டுள்ள பாடக்கருத்தின் சந்தர்ப்பப் பொருளுக்கு இவ்வசனப் பகுதி எவ்வாறு பொருந்துகிறது என்பதைக் காண்பித்தலே இவ்வேளையில் எனது நோக்கமாக உள்ளது.

ஒருபுறத்தில் நாம் தீர்ப்பிடுபவர்களாக இருக்கக் கூடாது; நாம் இரக்கம் நிறைந்தவர்களாகவும் தயவு உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். மறுபுறத்தில் நாம் வஞ்சிக்கப்படுகிறவர்களாக இருக்கக் கூடாது; நமது பாதங்களில் இருந்து தூசியை எப்போது உதற வேண்டும் என்பதை நாம் அறிந்திருப்பது அவசியம். இந்தத் தீர்ப்புகள் ஏற்படுத்தக் கடினமானவையாக உள்ளன. நாம் மென்மையாக இருக்க வேண்டிய வேளைகளில் முரட்டுத்தனமாய் இராதபடிக்கு அல்லது நாம் முரட்டுத்தனமாய் இருக்க வேண்டிய வேளைகளில் மென்மையாய் இராதபடிக்கு நம்மை எவ்வாறு காத்துக்கொள்ள முடியும்? 7முதல் 11வரையிலான வசனங்கள் நமக்குப் பதில் அளிக்கின்றன: நாம் தேவனைச் சார்ந்திருக்க வேண்டும்.

> கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்; ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்கிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லை கொடுப்பானா? மீனைக் கேட்டால் அவனுக்குப்

*பாம்பை கொடுப்பானா? ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?*

இவைகள் எவ்வளவு மாபெரும் கூற்றுக்களாக உள்ளன! தேவன் ஜெபத்திற்குப் பதில் அளிக்கிறார்! ஒரு அன்பான தந்தை தமது பிள்ளைகளின் தேவைகள் மற்றும் வேண்டுகோள்களுக்குப் பதில் செயல் செய்வது போன்றே, தேவனும் நமக்குப் பதில் அளிக்கிறார்.

இவ்வசனப்பகுதி நமது பாடக்கருத்துடன் பல வழிகளில் உறவுபடுகிறது. எடுத்துக்காட்டாக, தேவன் நமக்கு இரக்கம் காண்பிக்கிறார், மற்றும் இது நாம் பிறருக்கு இரக்கம் காண்பிக்க வேண்டும் என்று மறைமுகமாக உணர்த்துகிறது. விசேஷமாக இது, நாம் நமது தேவைகளை - குறிப்பாக மற்றவர்களை கையாளுவது எவ்வாறு என்று அறிதலுக்கான தேவையை - தேவனிடம் எடுத்துச் செல்ல முடியும் என்று வலியுறுத்துகிறது. இந்த விஷயத்தில் இச்செய்தியானது யாக்கோபு 1:5அ வசனப்பகுதியில் உள்ள செய்தியைப் போன்றதாக உள்ளது: "உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், ... தேவனிடத்தில் கேட்கக்கடவன்."

தேவன் "தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு *நன்மையானவைகளைக்* கொடுப்பார்" என்று 11ம் வசனம் கூறுகிறது. யாரோ ஒருவர், "ஒரு புதிய வீடு நல்லதாக இருக்கும் ... அல்லது அதிக உடைகள் ... அல்லது இன்னும் உயர்ந்த ஊதியம் தரும் வேலை" என்று சொல்வதைக் கேட்கிறேன் - ஆனால் உண்மையிலேயே "நல்லது" எது? ஆவிக்குரிய வரங்கள் மேன்மையானவைகள் அல்லவா? இவற்றில் ஆவிகளைப் பகுத்தறிதல் உள்ளது: எல்லா வகையான மக்களையும் கையாள்வது எவ்வாறு என்று அறியும் திறன். நீங்கள் உண்மையிலேயே மக்களுடன் இணக்கமாயிருக்க விரும்பினால், உறவுகள் உங்களுக்கு முக்கியமானவையாக இருந்தால், நீங்கள் ஜெபத்தில் அதிக நேரம் செலவிடுவீர்கள்.

## பொன்விதியின்படி வாழுங்கள் (7:12)

கடைசியாக நாம் 12ம் வசனத்திற்கு வருகிறோம். இவ்வசனம் மலைப்பிரசங்கத்தின் உயர்ந்த கருத்து என்று அழைக்கப்பட்டுள்ளது. நிச்சயமாகவே இது, மற்றவர்களுடன் இணக்கமாயிருப்பது எவ்வாறு என்ற கலந்துரையாடலை உச்சப்படுத்துகிறது. இவ்வசனப் பகுதி "ஆதலால்" என்ற வார்த்தையுடன் தொடங்குகிறது. ஒரு கருத்தில் இது - சகோதரர் அல்லது விரோதி, நண்பர் அல்லது எதிரி என்று யாராக இருப்பினும் - மனித உறவுகள் பற்றி இந்தப் பிரசங்கத்தில் கூறப்பட்டுள்ள யாவற்றையும் தொகுத்துரைக்கிறது. குறிப்பாக இது, மற்றவர்களுடன் இணக்கமாயிருத்தல் பற்றி 7:1-11ல் நாம் கற்றுக்கொண்டுள்ள யாவற்றையும் தொகுத்துரைக்கிறது: "ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்க தரிசனங்களுமாம்." இதை நாம் பொதுவாகப் பின்வருவது போன்று விளக்கப்படுத்துகிறோம்: "மற்றவர்கள்

உங்களுக்குச் செய்ய விரும்புவதையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.” அனேகமாக இயேசுவினால் கூறப்பட்டவற்றில் இது, உலகளாவிய வகையில் நன்கு அறியப்பட்டதாக உள்ளது எனலாம். ஏறக்குறைய ஒவ்வொருவரும் இவ்வார்த்தைகளைப் பாராட்டுகின்றனர். இந்தக் கொள்கையின்படி வாழாதவர்களும்கூட இதைப் பாராட்டுகின்றனர்.

இயேசுவுக்கு முன்னர் வசனப்பகுதியின் 12அ கொள்கையைப் பலர் எதிர்மறையாகக் கூறியிருந்தனர்: “மற்றவர்களால் உங்களுக்குச் செய்யப்பட நீங்கள் விரும்பாதவற்றை மற்றவர்களுக்கு நீங்களும் செய்யாதீர்கள்.” இதை விளக்கப்படுத்தியவர்களில், சாக்ரட்டீஸ், அரிஸ்டாட்டில், குறிப்பிடத் தக்க யூதத்துவப் போதகரான ஹில்லல், கன்ப்யூசியஸ் மற்றும் புத்தர் ஆகியோர். இருப்பினும் இதை நேர்மறையாக முதலில் விளக்கப்படுத்தியவர் இயேசுவே ஆவார்: “நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.” எதிர்மறை மற்றும் நேர்மறை அணுகுமுறைகளுக்கு இடையில் உலகப்பெரிய வேறுபாடு உள்ளது: எதிர்மறைக் கூற்று என்பது சுய பாதுகாப்பின் விஷயமாக இருக்கையில், நேர்மறைக் கூற்று சுயத்தை மறக்கும் தன்மையாக உள்ளது. ஒன்றுமே செய்யாமல் எதிர்மறைக் கூற்றை நிறைவேற்றுவது சாத்தியமாக உள்ளது,[18] அதே வேளையில் ஒருவர் நன்மை செய்வதனால் மாத்திரமே நேர்மறைக் கூற்றை நிறைவேற்ற முடியும். எதிர்மறைத் தத்துவத்தைத் தழுவிக்கொள்வதற்கு ஒருவர் தேவபக்தி உடையவராக இருக்க வேண்டும் என்றுகூட அவசியமில்லை; அது வாழ்வைக் கண்ணோக்கும் இயல்பான வழியாக உள்ளது. இருப்பினும், இரண்டாவது விஷயமானது சுத்தமான பக்தியின் அடிப்படையில் அமைந்துள்ளது. இயேசு, “... இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்க தரிசனங்களுமாம்” என்று கூறினார் (வசனம் 12ஆ). NIV வேதாகமத்தில், “... இது நியாயப்பிரமாணத்தையும் தீர்க்கதரிசனத்தையும் தொகுத்துரைக்கிறது” என்றுள்ளது. அதாவது, பொன்விதியானது மனித உறவுகள் மீதான பழைய ஏற்பாட்டுப் போதனையைத் தொகுத்துரைக்கிறது.[19]

இவ்வசனப்பகுதி இதற்கு முன் வந்த விஷயங்களின் தொகுப்புரையைக் கொடுப்பதற்காக, கலந்துரையாடலின் முடிவில் வருகிறது, ஆனால் இது உறவுமுறைகளில் எழக்கூடிய எண்ணற்ற மற்ற சூழ்நிலைகளை எடுத்துரைக்கும் கொள்கையொன்றை விளக்குவதற்காகவும் இங்குள்ளது. உறவுமுறையில் சாத்தியமாகக் கூடிய ஒவ்வொரு பிரச்சனையையும் கையாளும் புத்தகம் ஒன்றை நீங்கள் கொண்டிருப்பதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள். அப்படிப்பட்ட தொகுப்பு ஒன்று எவ்வளவு பெரியதாக இருக்கும் என்று காட்சியில் காண முயற்சி செய்யுங்கள். பின்பு நீங்கள் யாரோ ஒருவரோடு உரையாடுகிறீர்கள் மற்றும் அங்கு ஒரு இடர்ப்பாடும் எழுகிறது என்று கற்பனை செய்துகொள்ளுங்கள். அதைக் கையாள்வது எவ்வாறு என்று கண்டறிவதற்காக நீங்கள் அப்புத்தகத்தின் பக்கங்களை வேகமாகத் திருப்புகிறீர்கள். ஒரு மணி அல்லது அதற்குச் சற்றேறக்குறையலான நேரத்தில் நீங்கள், உங்களுக்குத் தேவையான பதிலைக் கண்டறிகிறீர்கள் மற்றும் எதிரே கண்ணோக்குகிறீர்கள் - அந்த மற்ற நபர் சென்றுவிட்டார். இப்படிப்பட்ட ஒரு தொகுப்பை உங்களுக்குக் கொடுப்பதற்குப் பதிலாக, செயல்விளைவில் இயேசு, “அந்த இடர்ப்பாட்டை அல்லது வேறு எந்த இடர்ப்பாட்டையும் கையாள்வது எவ்வாறு” என்பது இங்குள்ளது. “உங்களை நீங்களே, ‘சூழ்நிலையானது மறுதலையாக இருந்தால் விஷயம் எவ்வாறு இருக்கும்? நான் எவ்வாறு நடத்தப்பட விரும்புவேன்?’ என்று

கேட்டுக் கொள்ளுங்கள். பின்பு மற்ற நபரையும் அதே போன்று நடத்துங்கள்.”

இது எவ்வளவு எளியதாக - இருப்பினும் எவ்வளவு ஆழ்ந்தறிவு உடையதாக - இருக்கிறது! வாழ்வு முழுவதும் இந்த அடிப்படையின் மீது அமைந்திருந்தால் நிலை எவ்வாறு இருக்கும் என்று உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? ஒவ்வொரு தொழிலும் வியாபாரமும் இவ்வகையில் செயல்பட்டால் எப்படி இருக்கும்? ஒவ்வொரு இல்லமும், ஒவ்வொரு பள்ளியும், ஒவ்வொரு நாடும், ஒவ்வொரு சபைக்குழுமமும் இந்தக் கொள்கையைக் கனப்படுத்தினால் எப்படி இருக்கும்?

நாம் பொது அறிவைப் பயன்படுத்தும்படிக் கர்த்தர் எதிர்பார்க்கிறார் என்பதைக் கூறச் சற்றே தாமதிக்கும்படி என்னை அனுமதியுங்கள். நம்மை நாம் மற்றவரின் இடத்தில் வைத்துப் பார்க்கும்போது மோசமானவற்றைச் செய்ய விரும்பாதிருக்கப் *போதிய அளவுக்கு, நாம் நல்லவர்களாக* இருப்போம் என்றும் மதியீனமானவற்றைச் செய்ய விரும்பாதிருக்கப் *போதிய அளவுக்கு நாம் ஞானமுள்ளவர்களாக இருப்போம்* என்றும் மத்தேயு 7:12 யூகிக்கிறது.[20] இல்லையென்றால், மதுபானம் அருந்துபவர்கள், “மக்கள் எனக்கு மதுபானம் தர வேண்டும் என்றே நாம் விரும்புகிறேன், எனவே மற்றவர்கள் எனக்கு எவைகளைச் செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேனோ, அவற்றையே அவர்களுக்குச் செய்வேன் - மதுபானப் புட்டிகள் ஒவ்வொன்றயும் தருவேன் என்று நியாயப்படுத்தலாம்.” எனக்கே உரிய ஒரு விவரிப்பைப் பயன்படுத்துவதென்றால், “நான் ஈரல் மற்றும் வெங்காயம் கலந்த உணவை[21] உண்ண விரும்புகிறேன், எனவே அடுத்த முறை நான் ஒரு உணவை ஏற்பாடு செய்கையில், எனது மனைவிக்காக - அவர் ஈரல் மற்றும் வெங்காயம் கலந்த உணவை *வெறுக்கிறார்* என்பது உண்மையாக இருந்த போதிலும் - ஈரல் மற்றும் வெங்காயம் கலந்த உணவைச் சமைப்பேன்” என்று நான் நியாயப்படுத்தலாம்.

இருப்பினும் நம்மில் பெரும்பான்மையானவர்கள், பொன்விதி எதைப்பற்றிப் பேசுகிறது என்பதைப் புரிந்துகொள்கிறோம் என்று நான் நினைக்கிறேன். இவ்வசனப் பகுதி, பொதுவான சத்தியங்களை, எல்லா மக்களுக்கும் உண்மையாக உள்ளவற்றைப் பற்றிக் குறிப்பிடுகிறது. நாம் யாவரும் பரிவிரக்கத்துடன் நடத்தப்பட விரும்புகிறோம், எனவே நாம் மற்றவர்களை அவ்வாறே நடத்த வேண்டும் - நாம் யாவரும் மதிக்கப்பட விரும்புகிறோம், எனவே நாம் மற்றவர்களை மதிப்பதை வெளிப்படுத்த வேண்டும். மற்றவர்கள் நம்மைப் பற்றிப் மிகச்சிறப்பான விஷயங்களை நம்ப வேண்டும் - நாம் செய்கிறவை பற்றிய மிகச்சிறப்பான கட்டி எழுப்புதலை இட வேண்டும் - என்று நாம் விரும்புவோம், எனவே மற்றவர்களுக்கு நாம் அதையே செய்ய வேண்டும். இந்தப் பட்டியல் விரிவாக்கப் படமுடியும். மற்றவர்கள் நம்மைப் புரிந்துகொள்ள முயற்சி செய்ய வேண்டும், நமது அறிவுக்குறைவின் குறைபாட்டை இரக்கம் என்ற மூடலினால் மூடி நம்மை மன்னிக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம் - எனவே மக்கள் நம்மை எவ்வாறு நடத்த வேண்டும் என்று நாம் விரும்புகிறோமோ, அவ்வாறே நாமும் அவர்களை நடத்துவோமாக.

ஒவ்வொருவரும் அவ்வாறு ஒவ்வொருவரையும் நடத்தும் ஒரு உலகத்தில் நாம் வாழ்ந்தால், அது சந்தோஷம் நிறைந்ததாக இராதா? ஒவ்வொருவரையும் *நாம்* அவ்வாறு நடத்தினால் அது சந்தோஷம் நிறைந்ததாக இராதா?

# முடிவுரை

*மகாத்மா காந்தி*[22] *தொடக்கத்தில் கிறிஸ்தவத்தினால் - குறிப்பாக மலைப்பிரசங்கத்தில் காணப்படும் பொன்விதி உள்ளிட்ட, மாபெரும் போதனைகளால் - மனம் ஈர்க்கப்பட்டார் என்று நான் வாசித்திருக்கிறேன். அவர் ஏன் ஒரு கிறிஸ்தவராகவில்லை என்று கேட்கப்பட்டபோது அவர், அந்தக் கொள்கைகளின்படி வாழும் எந்தக் கிறிஸ்தவரையும் தாம் கண்டிருக்கவில்லை என்று கவலையுடன் பதில் அளித்தார். நாம் படித்துள்ள இந்தக் கொள்கைகளின்படி நான் வாழ்கிறேனா? நீங்கள் வாழ்கிறீர்களா?*

*மத்தேயு 7:1-12ம் வசனப் பகுதியைத் தொடர்ந்து புகழ்பெற்ற பின்வரும் வார்த்தைகள் உள்ளன:*

> *இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர் (வசனங்கள் 13, 14).*

*இந்த வாசல் பின்வரும் பண்புகளைக் கொண்டவர்களை மாத்திரமே அனுமதிக்கக் கூடிய அளவிற்கு மிகவும் இடுக்கமானதாக உள்ளது என்று கருத்துக் தெரிவித்தல் நியாயமானதாக இருக்குமா?*

- *தீர்ப்பிடாது இருக்கிறவர்கள்?*
- *தங்கள் வாழ்வில் அவசியமான மாறுதல்களை ஏற்படுத்துவதை முதல் அக்கறையாகக் கொண்டவர்கள்?*
- *மற்றவர்களுக்கு உதவும் முயற்சிகள் தாழ்மை மற்றும் உணர்வுடைமை ஆகியவற்றினால் பண்புப்படுத்தப் பட்டவர்கள்?*
- *ஒவ்வொருவரும் வேறுபட்டவர்கள் என்று உணர்ந்து அறிந்தவர்கள் - மற்றும் சிரமத்தைக் கையாள்வது எவ்வாறு என்று கற்றிருந்தவர்கள்?*
- *தேவனைச் சார்ந்திருக்கத் தீர்மானித்தவர்கள்?*
- *பொன்விதியின்படி வாழ்பவர்கள்?*

*ஆம், மத்தேயு 7:13, 14ம் வசனங்கள், மனித உறவுகளுக்கும் மேலானவற்றில் கூட நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று நான் அறிகிறேன், ஆனால் இவ்வசனப்பகுதி இதை (மனித உறவுகளை) உள்ளடக்குகிறது என்பது நிச்சயம். மற்ற மக்களுடன் இசைவிணக்கமாக இருத்தலைக் கற்றுக் கொள்வது எவ்வளவு முக்கியமானதாக உள்ளது!*

*மற்றவர்கள் உங்களை நடத்த வேண்டிய விதத்தில் நீங்கள் அவர்களை நடத்தத் தவறியிருக்கிறீர்களா? நானும் கூடத் தவறியிருக்கிறேன். நாம் மனந்திரும்பி எதிர்காலத்தில் சிறப்பாகச் செயல்படத் தீர்மானித்தால், நமது குறைவுகளைத் தேவன் தமது கிருபைத்தன்மையின் மூலமாக மன்னிப்பார் என்பதை உணர்ந்தறிதல் ஆச்சரியம் நிறைந்ததாக இருப்பதில்லையா?*[23] *நமது பாடமானது, நமது சொந்த வாழ்வில் அவசியமான மாற்றங்கள் பற்றி நாம் முதலில் அக்கறை கொள்ள வேண்டும் என்ற கருத்துடன் தொடங்கிற்று. இது சுய- பரிசோதனைக்கான வேளையாக உள்ளது. உங்கள் வாழ்வானது,*

முக்கியமான மாற்றங்களுக்காகக் கதறிக்கொண்டுள்ளது என்றால், நாங்கள் அதில் உங்களுக்கு உதவ முடியும், தயவுசெய்து எங்களுக்கு அதைத் தெரியப்படுத்துங்கள்.

---

குறிப்புகள்

[1]இது ஒரு வீட்டைத் தாங்கி நிற்கும் செதுக்கிய மரத்தூண் அல்லது கூரையைத் தாங்க உதவும் விட்டம் என்று சிலர் நினைத்தனர். எவ்வகையிலும் இது ஒரு பெரிய மரத்துண்டாக இருக்கிறது. [2]KJV வேதாகமத்தில் "mote" என்றுள்ளது, இது "ஒரு சிறிய துகள்" என்று அர்த்தப்பட்ட மத்திய காலத்து ஆங்கில வார்த்தையாக உள்ளது (*The American Heritage Dictionary,* 4th ed. [2006], s.v. "mote"). [3]உத்திரத்தைக் கண்ணில் கொண்ட ஒரு மனிதர், துரும்பைக் கண்ணில் கொண்ட ஒரு மனிதருக்கு உதவி செய்வதாகக் கூறுதல் என்பது, நான் யாருக்கேனும் முடி வளர உதவி செய்வதாக முன்வருதலுக்குத் தோராயமாகச் சமமானதாக உள்ளது. (நான் "அரைமொட்டையன்" என்ற நிலையில் இருக்கிறேன் [லேவியராகமம் 13:41].) [4]அவர் அவனைக் கொலை செய்விக்க தயாராக இருந்தார். [5]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 59. [6]Bertrand Russell, "Brains Trust," BBC radio broadcast, 26 April 1948 (www.stoneforest.org/critical.html.; Internet; accessed 6 May 2008). [7]தொலைபேசிக் கம்பம் என்பது எனது உரையைக் கேட்பவர்களுக்குப் பழக்கமான "விட்டமாக" அல்லது "உத்திரமாக" உள்ளது. உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குப் பழக்கமான ஒரு சொற்றொடரைப் பயன்படுத்துங்கள். [8]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 1 (Wheaton, Ill.: Victor Books, 1989), 29. [9]இது அன்பின் தரம் வாய்ந்த விளக்கங்களில் ஒன்றை மறைமுகமாக உணர்த்துவதாக உள்ளது: "அன்பு என்பது அன்புகூரப்படுபவர்களுக்கு மிகச்சிறந்தவற்றை நாடுகிறது." உண்மையான அன்பு என்பது அன்புகூரப்பட்டவரின் வாழ்வில் பாவத்தை, அவரது ஆத்துமாவைப் பேரழிவுக்கு உட்படுத்தும் பாவத்தைக் காணாது விட முடியாது. மேலும் மத்தேயு 18:15ஐயும் காணவும். [10]இதற்கு மத்தேயு 5:23, 24ஐக் கொண்டு ஒரு இணைகருத்தைத் தரவழைக்க முடியும். அதில் இயேசு, "முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து" என்று கூறினார். பலி செலுத்துதலை ஊக்கம் குன்றச் செய்தல் என்பது கிறிஸ்துவின் விருப்பநோக்கமாக இருக்கவில்லை; மாறாக, பலிசெலுத்தப்படுவதற்கு முன்னர் செய்யப்பட வேண்டியவற்றை அவர் வலியுறுத்தினார்.

[11]சிலர், "பரிசுத்தமானதை" என்பதற்குப் பதிலாக, இவ்வேத வசனத்தில் உள்ள வார்த்தை "காதணி" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவித்துள்ளனர்; ஆனால் "வேதவசனம் தான் நிற்கிறபடியே ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாக [மற்றும் புரிந்துகொள்ளப்படக் கூடியதாக] உள்ளது." (Robert H. Mounce, *Matthew,* New International Biblical Commentary [Peabody, Mass.: Hendrickson Publishers, 1991], 65.) [12]பன்றி என்பது குறிப்பாக "அசுத்தமானது" என்று வகைப்படுத்தப்பட்டிருந்தது (லேவியராகமம் 11:7); நாய் என்பது விரிகுளம்பு உள்ளதாகவும் அசைபோடாததாகவும் இருந்ததால் "அசுத்தமானதாக" இருந்தது (வசனங்கள் 3, 4). [13]மத்தேயு 7:6ம் வசனம், கடைசிப்பகுதி ("திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும்") முதல் பகுதியை ("நாய்கள்") குறிக்கிறதான திருப்பப் பட்ட இணைகருத்திற்கு ஒரு உதாரணமாக உள்ளது என்று பல கல்வியாளர்கள் நம்பியிணங்கியுள்ளனர். [14]உலகில் நான் வாழும் பகுதியில், கடந்தகால ஆண்டுகளின் புகழ்பெற்ற "razorback" [பன்றியின் ஒருவகை] பற்றி நாங்கள்

பேச முடியும். உலகத்தின் பிற பாகங்களில் உள்ள பிரசங்கியார்கள், காட்டுப்பன்றி, பெருந்தலைப் பன்றி அல்லது அமெரிக்கக் காட்டுப்பன்றி போன்ற மிருகம் பற்றிக் குறிப்பிடலாம். [15]Didache என்ற ஏவுதல் பெற்றிராத தொடக்க காலக் கிறிஸ்தவப் பதிவேடு, ஞானஸ்நானம் பெற்றிராதவர்களுக்குக் கர்த்தருடைய பந்தி ஒருக்காலும் தரப்படக்கூடாது என்று போதிப்பதற்கு மத்தேயு 7:6ஐப் பயன்படுத்தியது. [16]இது "உங்களிடத்தில் இனி அதிகமாய்ச் செய்ய என்னிடத்தில் ஒன்றும் இருப்பதில்லை" என்று சுட்டிக்காட்டும் அடையாளத்துவ வழியாக இருந்தது. [17]இயேசு தாமே தமது முத்துக்களை பன்றிகளுக்கு முன்னால் போடுவதில் இருந்து விலகியிருந்தார். அவ்வப்போது அவர், பரிசேயர்களுக்கு பதில் அளிக்காதிருந்தார் (மத்தேயு 15:2, 3; 21:23-27). அவர் ஏரோதினிடத்தில் பேசாதிருந்தார் (லுக்கா 23:9). [18]மத்தேயு 25ல் உள்ள "வெள்ளாடுகள்" எனப்படுபவர்கள் இந்த விதியின் எதிர்மறை விளக்கத்தின் அடிப்படையின் மீது இரட்சிக்கப்பட்டிருக்கலாம் (வசனங்கள் 31, 32, 41, 42). [19]வேறொரு இடத்தில் இயேசு, ஒருவர் தமது அயலாரை அன்புகூருதல் என்பது நியாயப்பிமாணம் மற்றும் தீர்க்கதரிசனங்களின் தொகுப்புரையாக உள்ளது என்று செயல்விளைவில் கூறினார் (காண்க மத்தேயு 22:37-40). பொன்விதியானது நமக்கு நமது அயலகத்தவர்களை அன்புகூருவதில் பயன்படுத்த வழிகாட்டுதலைத் தருகிறது. [20]Adapted from J. W. McGarvey and Philip Y. Pendleton, *The Fourfold Gospel or A Harmony of the Four Gospels* (Cincinnati: Standard Publishing Co., 1914), 265.

[21](கன்றுக்குட்டியின் அல்லது பன்றியின்) ஈரலை வெங்காயத்துடன் கலந்து சமைத்த உணவு, அமெரிக்க நாட்டில் மிகவும் பொதுவான உணவாக உள்ளது. மணம் வீசும் இந்த கலப்புணவு, சிலரால் மகிழ்வுடன் அனுபவிக்கப்படுகிறது ஆனால் மற்றவர்களால் வெறுக்கப்படுகிறது. [22]இந்தியாவில் அஹிம்சைக்கான தேசீய இயக்கத்தின் தலைவரான மகாத்மா காந்தி (1869-1948), இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மாபெரும் தேசத்தலைவர்களில் ஒருவராக இருந்தார். [23]எதிர்காலத்தில் சிறப்பாகச் செயல்படத் தீர்மானித்தல் என்பது உண்மையான மனந்திரும்புதலின் பகுதியாக உள்ளது.